VIMBAM



அலோசியஸ் ஜெயராஜ் கனகரட்னா
26.08.1926 - 11.10.2006

YMCA Hall
Walthamstow - London E17
18.11.2006

அஞ்சலி உரைகள்:

- நா.சபேசன்
- மாதவி சிவலீலன்
- மாலி
- யமுனா ராஜேந்திரன்
- நிர்மலா ராஜசிங்கம்
- மு.புஷ்பராஜன்
- மு.நித்தியானந்தன்
- இ.பத்மநாப ஐயர்

But I could say, in hindsight, that had we adopted AJ's emphasis of Marxist aesthetics in Sri Lanka and Tamil Nadu instead of the ones followed by the parties, Tamil literary contributions may have been more fertile.

- Tamilavan

DOB: 26-8-1934

ஏஜே என்ற பேரறிவாளன் ஒரு ஞானியைப்போல வாழ்ந்த மாமனிதர். அவரது எளிமையும் தன்னடக்கமும், பொது அரங்குக்கு வரவிரும்பாத மனோபாவமும், பரபரப்பான இந்த இலக்கிய உலகில் சந்தடி எழுப்பிய வராக அவரைத் தெரியவிடவில்லை. ஆனால், யாழ்ப்பாணம் மூன்றாம் குறுக்குத் தெருவிலும், திருநெல்வேலியிலும் உலவித் திரிந்த இந்த மனிதர், எவ்வளவு வன்மையாகத் தனது இருப்பை இலக்கிய உலகில் உணர்த்தியி ருக்கிறார் என்பதை, அவரின் மறைவின் பின்னான நிகழ்வுகள் உறுதிப்படுத்தியிருக்கின்றன. அவரது மறைவுகுறித்து அச்சு ஊடகங்களும், வானொலி, தொலைக்காட்சிகளும், இணையத்தளங்களும் நியாயமாகவே தங்களது அஞ்சலிகளைச் செலுத்தியுள்ளன.

இலங்கையில் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும், அவுஸ்திரேலியாவிலும் கனடாவிலும் லண்டனிலும் இலக்கிய அபிமானிகள் ஏஜேயின் இலக்கியப் பங்களிப்புகள் குறித்து நினைவு கூர்ந்துள்ளனர்.

ஏஜேயை லண்டனுக்கு வரவழைக்க நாங்கள் தொடர்ச்சியாக மேற் கொண்ட முயற்சிகளைத் தோற்கடிப்பதில் ஏஜே வெற்றியடைந்துள்ளமை ஒரு துயரமான பதிவாகும்.

ஓர் உயர்ந்த மனிதனுக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்த ஏஜே "வாராது வந்த மாமணி போல்" நம்மிடையே தோன்றியவராவார்.

அவரைக் கண்ணீரோடு நினைவுகூறும் இதயங்களின் சிறு காணிக்கை இதுவாகும்.



AJ:
அகலத் திறந்த ஆழக் கண்கள்

பாக்கியநாதன் அகிலன்

விரிவுரையாளர், நுண்கலைப் பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இந்த வருடத்தின் ஆரம்ப மாதங்களில் ஏஜே இரண்டாவது தடவையாகவும் யாழ்ப்பாணம் பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவரது தேகம் சற்று வதங்கியிருந்த போதிலும், ஓரளவுக்கு உற்சாகமாகவே இருந்தார். பேச்சு, அவரது மருத்துவர், உடல்நிலை என்பவற்றைச் சுற்றியே பெருமளவுக்கு இருந்தது. இம்முறை அவரது கைகளிலோ, படுக்கை விளிம்பிலோ எந்தவொரு நூலையும் பார்த்ததாக நினைவில்லை. பார்வையாளர் நேரம் முடியும் தறுவாயிலி ருந்தது. சிறிதுதான் பேசியிருப்போம். அது கோடைகாலத்தின் வெம்மையான சாயந்தர வேளையாக இருந்தபோதிலும், ஏஜே தனக்குச் சற்றுக் குளிர்வதாகக் கூறினார். காலம், அவரது தேகத்தின் உஷ்ணத்தை விரைந்துறிஞ்சும் ஒரு பருவத்தினுள் அவரை நுழைத்துவிட்டதோ என்ற எண்ணம் சற்று அச்சத்துடன் ஏற்பட்டது. அதற்கப் புறம் ஏஜே மேலதிக சிகிச்சையும், ஓய்வும் வேண்டி கொழும்பு போனார். மாதங்கள் சில இடையில் உருண்டன. யாழ்ப்பாணம், மெதுவாய் வழுக்கி, சன்னங்கள் பாயும், பீரங்கிகள் சீறும் ஒரு களமாயிற்று. இடையிடையே தொலைபேசி ஊடாகக் கிடைத்த ஏஜேயின் உடல்நிலைபற்றிய செய்திகளையும், யாழ்ப்பாணம் வரலாமா என்ற அவரது அந்தரிப்பினையும் கிருஷ்ணகுமார் சொல்லிக்கொண்டிருந்தார். ஏஜே வரவில்லை. வரமுடியவுமில்லை. அவரது ஆசைக்கு மாறாக அவரது தேகம் நோய்வாய்ப்பட் டிருந்தது. யாழ்ப்பாணத்திற்கான பாதைகள் யாவும் அடைக்கப்பட்டிருந்தன. 11ஆம்

திகதி காலையில் அவரது மரணச் செய்தி மட்டுமே வந்தது; ஏஜே வரவில்லை. அவர் தீரக் காதலித்த, 'சேற்றிலூன்றிய தடி' போலிருந்த யாழ்ப்பாணத்திடம், அது பசித்தும் - தனித்துமிருக்கையில், அதனிடம் சொல்லிக்கொள்ளாமலே அவர் தன்னை 'மறு நடவு' செய்ய விரும்பாத ஓரிடத்தில் இருந்து விடைபெற்றுப் போனார்.

ஏஜேயை முதன்முதலாகப் பார்த்தது 1980களின் பிற்பகுதியில், இப்போது சரியாக நினைவுபடுத்த முடியாதுள்ள ஏதோவொரு தெருவில், தெருவில் போகும் யாரையும் விலத்திவிட்டு உடனடியாகக் கவனத்தைக் கோருமொருவராகத் தெருவோரம் அவர் நடந்து போய்க்கொண்டிருந்தார். முழுத் தெருவையும் உறிஞ்சி, தனது குடைக்குள் வைத்துக்கொண்டு அவர் சென்றுகொண்டிருப்பதாக எனக்குப்பட்டது. சற்றுப் பிரமிப்பையும் மதிப்பையும் உருவாக்கிய அந்த மனிதர், சற்றுப் பிற்பட்ட காலத்தில் ஏ.ஜே.கனகரட்னா என எனக்கு அறிமுகப்படுத்தப்பட்டார். இதற்கும் சற்றுப் பிந்திய காலத்தில், அனேகமான சாயந்தரங்களில் ஏஜேயிடம் சென்று பேசும் இளம் நண்பர்கள் சிலரோடு ஒட்டிக்கொண்டு போகும் ஒருவனாக நானிருந்தேன். அப்போது பாடசாலை மாணவனாக இருந்த எனக்கு, அவர்களிடையே நிகழும் உரையாடல்கள் புரிந்தும் - புரியாதும் இருந்ததுடன், நானறியாத பல கதவுகளைத் திறப்பனவாகவும் இருந்தன. கூரறிவும், நகையுணர்வும், தன்முனைப்பின்மையும், "சிறியாரென இகழாமையும், பெரியாரென புகழாமையும்" நிதானமும் நிரம்பப் பெற்றவராக ஏஜே இருந்தார்.

தொண்ணூறுகளின் ஆரம்ப வருடங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு மாணவராக நாங்கள் சென்ற வேளையில் ஏஜே ஓய்வு பெற்றிருக்கவில்லை. மூத்த பல்கலைக்கழக ஆசிரியர்கள் பலர் வெளியேறியும், பலர் விடுப்பில் இருந்தும் அல்லது வெளியூர்களுக்குச் செல்பவர்கள், உரிய காலத்தில் திரும்பிவரவும் முடியாதிருந்த நெருக்குவாரமான சூழலில், குறிப்பாக 1995 இடப்பெயர்வுக்குப் பிற்பட்ட காலத்தில் சரியாகப் பாத்திகட்டி, சீராக்கப் படாமல், சரியான உரமின்றி, காடுமண்டிச் சடைத்திருந்த எங்களுக்கு ஏஜே ஒரு வரே உசாத்துணையாக இருந்தார். ஏஜே பல 'அறிஞர்கள்' போல எல்லாம் தெரிந்தவர் அல்ல. ஆனால்,அவருக்குத் 'தெரியாதனவற்றுக்கு'ச் செல்லும் பாதைக்கான முக்கியமான சில தடயப் புள்ளிகளையேனும் அவரால் இனங்காட்டமுடியும்.

எனக்குத் தெரிந்தவரையில் ஏஜே போல நூலகங்களைப் பயன்படுத்தியவர்கள் எவருமில்லை; அவரொரு நூல்மாந்தி; மது அருந்துவதில் அவருக்கு எவ்வளவு

இன்பம் இருந்ததோ, அதனிலும் அதிக களிப்பினை நூல்களைப் பருகுவதில் அவர் பெற்றிருந்தார். பல்வகைத் தன்மை யும் - பரந்த வீச்சுமுடையவொரு களமாக அது இருந்தது. தேர்ந்த வாசகனுக்குரிய நூற்தெரிவும் - வரிகளை ஊடறுத்துச் செல்லும் ஆழமான பார்வையும் காரண மாக ஏஜே, தான் படிக்கும் நூல்களை யெல்லாம் மீளப்படைத்தார். இது வெறு மனே மொழியாக்குகை (transcreation) பகைப்புலத்தால் ஏற்பட்டது மட்டுமின்றி, அதிலும் அதிகமாக விரிவான வாசிப்புப் பின்னணியினால் ஏற்பட்ட பாடநிலை ஊடாட்டத்தினாலும், சமூகப் பிரக்ஞை யினாலும் சித்தித்த ஒன்றாகவிருந்தது. இது அவரது வாசகர்களுக்குத் திறந்த வாசிப்புக்கான வாய்ப்புகளை அதிகரித் தது. மத்து இதற்குச் சிறந்த உதாரணம்.

அவரது அந்நியனும், துறவியும் அவரை வரிசைகளில் அமைதியாகப் பின்னிருக்குமாறு பணித்திருந்தபோதிலும், ஏஜே நவீன தமிழின் செழுமை மிகுந்த முன்னோடிகளின் வரிசையைச் சேர்ந்தவர். குறிப்பாக 1960களில் தமிழில் இடதுசாரி – மார்க்சியச் சிந்தனைகளின் பல்வகைப் போக்குகள், மானுடவியல், சூழலியல், உளவியல், மொழிவரலாறு, அரசியற் கோட்பாடுகள், மருத்துவம், பொருளியல், தொன்மவியல், கலை (குறிப்பாகத் திரைப்படம்), இலக்கியம் முதலியன பற்றிய ஆழமான முன்னறிவிப்புகளை ஏஜே தந்திருந்தார்.

மார்க்சிய - இடதுசாரிச் சிந்தனைகளின் செல்வாக்குகளுக்கு அதிகமுட்பட்ட ஏஜே '1956ஆம் ஆண்டில் இலங்கையில் நிறைவேற்றப்பட்ட தனிச்சிங்களச் சட்டத் தின்' குழந்தையுமாவார். காலனிய – ஆங்கில மேட்டுக்குடிசார் வளர்ப்புப் பகைப்புலமு டையே ஏஜேயை இவ்விரண்டுமே பேரளவில் வடிவமைத்திருந்தன. அதேசமயம், அவரது நண்பர்கள் கூறுவதுபோல கத்தோலிக்க அறவியலின் ஆழமான பாதிப்பு களையும் அவர் தரித்திருந்தார்.

ஏஜேயின் மிக முக்கியமான பண்பு, அவர் தமது காலத்தின் மேலாண்மை அலைகளால் அடித்துச் செல்லப்படாதவர் என்பது மட்டுமன்றி, அவற்றிற்கு வெளியே தனக்கான தனித்துவமான நிலைப்பாடுகளுடன் இருந்தாரென்பதுமாகும். குறிப்பாக 1960, 1970களில் மார்க்சிய - இடதுசாரிச் சிந்தனைப் பேரோட்டம் முதன்மை பெற் றோடிய நமது சூழலுக்குள் ஏஜேயின் எழுத்துகளும் அவற்றைப் பிரதிபலித்தன. ஆயினும் ஏஜே ஒருவகையில் அந்தப் பேரோட்டத்தின் முதன்மை அலையெறிவுக்கு வெளியிலேயே இருந்தாரெனக் கூறலாம். அவர், தமது சகபாடிகள் - மார்க்சிய அறி ஞர்கள் என அறியப்பட்டோர் மற்றும் இடதுசாரிக் கட்சிகளின் நிலைப்பாட்டிலிருந்து அதிகம் விலகியே இருந்தார். அவரிடம் பண்டித மார்க்சியம் இருக்கவில்லை. அது அவருக்கு 'ஆப்த வாக்கியம்' அல்ல. அவரது வாசிப்பும் - பண்பும் அதற்கு அனும திக்கவுமில்லை. பதிலாக அவர் மார்க்சியத்தை விமர்சனபூர்வமாகப் பார்த்தவராக - அதன் புதிய, மாறும் சிந்தனைகளை வரவேற்கும் தமிழ் முன்னோடிகளில் ஒருவராகவும் இருந்தார். குறிப்பாக, தமிழ்ப் பண்பாட்டு வட்டகையில் கலை - இலக்கியம் தொடர்பாக

மார்க்சியம் கொண்டிருந்த கட்டுப்பெட்டித்தனங்களை தகர்க்கத்தக்க, 'அடிக்கட்டுமானம் - மேற்கட்டுமானம்' தொடர்பான செந்நெறி மார்க்சிய அடிப்படைகளை கேள்விக் குள்ளாக்கும் எழுத்துகளை, பண்டித மார்க்சியம் கோலோச்சிய காலத்தில் ஏஜே அமைதியாக முன்வைத்துக்கொண்டிருந்தார். இது கோபர்ச்சேவின் 'பெரெய்ஸ்ரொய்கா - கிளாஸ்ரிநொஸ்ற்' வரை தொடர்ந்தது. குறிப்பாக றெஜி சிரிவர்த்தனவிடமிருந்து அவர் தமிழுக்குக் கொணர்ந்த முதன்மையான கையிருப்பு இவற்றோடுதான் அதிகம் தொடர்புபட்டிருந்தது. இதுபோலவே தேசிய இனப்பிரச்சினையில், மார்க்சியத்தின் கோட்பாட்டு நிலைப்பாடு தொடர்பாக ஈழத்தில் தமிழர் உரிமைப் போராட்டத்துடன் எழுந்த கேள்விகள் மத்தியில் ஏஜே கொண்டிருந்த நிலைப்பாடும், அது தொடர்பில் அவரது உழைப்புகளும் முக்கியமானவை. குறிப்பாகப் பல்கலைக்கழக மறுமலர்ச்சி கழகத்திற்காக ஏஜே மொழிபெயர்த்த **எல்லாளன் சமாதியும் வரலாற்று மோசடியும்** தொடக்கம் **அலை வெளியீடாக** வந்த **மார்க்சியவாதிகளும், தேசிய இனப் பிரச்சினையும்** என்ற நூல் வரை, சிலவேளை அவரது பெயர் தரிக்காது வந்ததாக அறியமுடிகின்ற, இது தொடர்பான வெளியீடுகள் வரை மிக முக்கியமானதே. மட்டு மன்றி இதே சுற்றுக்குள் அடித்த முற்போக்கு அலை வீச்சினுள்ளும் ஏஜேயின் எழுத்துகள் அதனை வற்புறுத்திய பலரது முறையிலிருந்தும் விலகியதும், சர்வதே சத்தன்மையான அளவுகோல்களை உடையதுமாகும். **தேசிய இலக்கியம்: சில சிந்தனைகள்** என்ற, 1961இல் **மரகதம்** இதழில் எழுதிய அவர் கட்டுரை இதற்குத் தகுந்த சான்றாகும். எல்லோரும் ஒரே திசையால், ஒரே மாதிரியாகக் கத்திச்செல் கையில் நிதானமாகத் தனது நியாயப்பாடுகளுடன் இருத்தலென்பது ஓர் அறிஞனின் மூலமான குணாம்சமாக இருக்கும். அது ஏஜேயிடம் இருந்தது. ஆகவேதான் ஏஜே எவ்வளவுக்கு எவ்வளவு தன்னைத் தாழ்த்திக்கொண்டாலும் உயரத்தில் தெரியும் தாரகைகளில் ஒருவராக உள்ளார்.

நினைவு ஒரு பாரம்; நினைவு ஒரு வலி. ஏஜே நினைவாகிப்போனார். சீனக் கவிஞர் பைஜிங்கின் (கி.பி. 7 - 8) தனது சுயவுரு பற்றிய கவிதை ஒருவகையில் ஏஜேயைப் பற்றியதுபோல எனக்குத் தோன்றியது. பைஜிங்கின் அந்தக் கவி தையுடன் இந்தக் கட்டுரை விடைபெறு கிறது.

சிவந்த கன்னங்கள் - நரைத்த தாடி
இது வைன் குடித்த நான்
கடைசியில்
வருஷங்கள் எல்லாம் ஓடிக் கழிந்த பின்
இப்போதெல்லாம் வெறுமையாகத்
தோன்றுகிறது.
நான் வயோதிகனாய்
நோய் கண்டவனாய்
ஒல்லியாய் இருந்த போதிலும்
கவிதைகள் மீதான காதல்
இன்னும் மீதமிருக்கிறது
பிரியமான ஒரு கனவான்
ஒரு திரையில் வரையப்பட்டதான
என் உருவ ஓவியத்தை
வைத்திருக்கிறார்
என்றறிந்த போது கொஞ்சம்
சிரித்தேன்.

○○○



ஏஜே: நான் கண்ட முகங்கள்

ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தம்
(கல்விசார் நூலகர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

ஏஜே...

மனக்கண்ணில் அதிகம் வருவது, பெண்மையின் சாயல் அதிகம் நிரம்பிய அந்த அழகிய, பெரிய விழிகள். காலை வேளைகளில் வெள்ளைவெளேரென்று இருக்கும் அந்த விழிகளை மட்டுமல்ல, மீதிநேரங்களில் செம்மை அதிகம் படர்ந்திருக்கும் அந்த விழிகளையும் அவருக்குத் தெரியாமல் தூர இருந்து ரசிப்பது எனக்கு மிகவும் பிடித்தமானதொன்று. ஆங்கிலம் என்றாலே அலறியடித்துக்கொண்டு ஓடும் மாணவப் பருவத்தில், ஆங்கிலம் கற்பிக்கும் அனைவரையும் அச்சத்தின்பாற்பட்டு அதிதூரத்தில் நின்று அதிசயிக்கும்போதுகூட, அந்தக் கூட்டத்தில் நிறத்தால், உருவத்தால், கால்களை அகலப் பரப்பி விரைந்து நடக்கும் அந்த நடையால், அவரைச்சுற்றி எப்போதும் நிற்கும் கூட்டத்தால் தனிப்படத் தெரியும் அவரை, பல்கலைக்கழக விரிவுரையாளர் பொது அறைக்கு முன்பாகப் போடப்பட்டிருக்கும் கல் இருக்கையில் அமர்ந்தபடி, எனது விழிகள் ஆர்வமுடன் தேடிப் பார்க்கும். இது ஆங்கில ஆசிரியனாக ஏஜே என்ற மனிதனிடம் நான் கண்ட முதலாவது முகம்.

1989இல் படிப்பறிவு மட்டும் துணையாகப் பல்கலைக்கழக நூலகத்தில் வேலை கிடைத்து நுழைந்த காலத்தில்; பல்கலைக்கழகப் பொது அறையில் அவரும்,

அவரைச் சுற்றி நிற்கும் கூட்டமும் பேசிக்கொள்ளும் விடயங்களை அரைகுறையாகச் செவிமடுக்கக்கூடிய வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. நூலகத்தின் நூல் அடுக்குகளி டையே குடுகுடுவென ஓடித் திரியும் ஏஜேயையும் அன்றாடம் தரிசிக்கும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. ஆங்கிலம் கற்பிக்கும் ஒருவர், ஆங்கில நூல்கள் அடுக்கி வைத்திருக்கும் பகுதியில் நிற்ப்பதற்கு மாறாக, நூல் அடுக்குகளின் ஒவ்வொரு பிரி விலும் அவரைப் பார்க்கும்போது, ஆங்கில விரிவுரையாளர் என்ற அச்சத்துடன், அதிகம் வாசிப்பவர் என்ற பிரேமையும் அதிகரித்தது. தராதரப்பத்திரப் படிப்பை மட் டும் கொண்ட குடும்பச் சூழலும், படித்தவர்கள் அரிதாக உள்ள சுற்றுச்சூழலும் கொண்ட என னுள் 'மதிப்புக்குரியவர்களுடன் சரிசமமாக நின்று உரையாடுவது அழகல்ல' எனச் சிறுவய திலிருந்தே வேரோடிப்போயிருந்த, ஆழமான கருத்துநிலை அவரது ஆற்றலை அறிந்துகொள் வதற்கான கால இடைவெளியை நீடித்ததை மறுப்பதற்கில்லை. ஒருவரைப்பற்றி அடுத்தவர் களிடம் கேட்டுத் தெரிந்துகொள்வதை விடவும், அவர்களின் ஆக்கங்கள் மூலமாக அவர்களின் ஆற்றல்களை அறிந்துகொள்வதிலேயே அதிக நாட்டம் கொண்ட எனக்கு, ஏஜே ஓர் ஆங்கில ஆசிரியன் என்ற எனது ஆரம்பத் தோற்றப் பாட்டை அடித்து மேவிக் கொண்டு உருவான 'வாசகன்' என்ற தோற்றப்பாடுதான், அவரைப் பற்றிய தேடலுக்கான அடித்தளமாக உருவாகி யது. உலக அறிவுப் பிரபஞ்சத்தைப் பொருட்துறைவாரியாகப் பிரிக்க உதவும் நூலகத் தகவல் அறிவியல் துறையை மூன்று வருடங்கள் முயன்று கற்றதன் பய னாக, ஒவ்வொரு பொருட்துறைக்குமுரிய வாசகர்களை இலகுவாக அடையாளம் காணத் தெரிந்த எனக்கு, ஏஜே எந்தப் பொருட்துறைக்குரிய வாசகர் என்று இனங்காணுவது ஆரம்பத்தில் குழப்பமா கவே இருந்தது. அரசியல்துறை சார்ந்த நூல் அடுக்குகளில் அவரை அடிக்கடி பார்த்து, சமூக அறிவியல் துறை சார்ந்தவர் எனப் பெரும் போக்காக முடிவெடுக்கும் மறுகணம், சினிமா பற்றிய நூல் அடுக்குகளிலிருந்து வெளிவருவார். Voracious Reader என்ற சொல்லுக்கு மிகப்பொருத்த மான மனிதன் அவர்தான். 1967ஆம் ஆண்டு தொடக்கம் **மல்லிகை** யைத் தளமாகக்கொண்டு அவரால் படைக்கப்பட்ட திரைப்படம், மார்க் சியம், இலக்கியம் போன்ற பொருட் துறைகள் சார்ந்த பல்பரிமாண சுயஎழுத்துகளும், கவிதைகள், அரசியல் உட்பட அவரது மொழி பெயர்ப்பு ஆக்கங்களும் மற்றும் பதிப்பு, தொகுப்பு என அவர்தம் பங்களிப்புகள் அனைத்தும், தீவிர வாசிப்புத்தன்மையிலிருந்து தோற்றம்



பெற்றதோர் பல்துறைப் புலமையாளனாக ஏஜேயை அடையாளம் காட்டுகிறது. பல்துறைப் புலமைமையாளர்கள் எம்மிடையே அன்றும் இன்றும் கணிசமாக இருந்த போதிலும்கூட, ஏஜேயின் உருவாக்கங்கள் தேர்ந்த சிற்பி ஒருவனின் சிந்தனையி லிருந்து இந்தச் சமூகத்துக்குக் கிடைத்த சிரஞ்சீவித்தனம் மிக்க ஓவியங்கள் என்பதில், அறிவுஜீவிகளிடம் எந்தவொரு கருத்து முரண்பாடும் இருக்கமுடியாது. மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்வதற்காகவே அவரது கணிசமான நேரங்கள் செலவிடப் பட்டமை, இச்சமூகத்துக்கு அவர் விட்டுச் செல்லும் பதிவுகளின் அளவைக் கணிசமாகக் குறைத்திருக்கிறது என்ற நெருடலும் மனதில் எழாமல் இல்லை. இது ஆக்க கர்த் தாவாக ஏஜேயிடம் நான் கண்ட அதிசயிக்கத்தக்க ஒரு முகம்.

கற்பிப்பவர்களுடன் தோளுக்குமேல் கைபோடும் அல்லது கால் தொட்டுக் கும்பிடும் தற்கால உறவுநிலையை அருவருத்து ஒதுக்கி, மதிப்புக்குரியவர்களைத் தூர இருந்து பிரேமிப்பதையும், எதிர்பாராமல் எதிரில் காண நேர்ந்தால், தலைசரித்து சிறுநகை யொன்றால் அவர்கள் மீதான எனது மதிப்பை வெளிப்படுத்துவதையும் எப்போதும் கடைப்பிடிக்கும் எனக்கு ஏஜேயுடன் ஏற்பட்ட முதலாவது தொடர்பு மிகவும் சுவாரஸ் யமானது. 90களின் ஆரம்பத்தில் தொழில் புரியும் இடத்தில் நான் பெற்ற அறிவை அமுல்படுத்துவதற்குத் தடையாக உள்ள அக, புறச் சூழல்கள் தொடர்பாக எனக்குள் ஏற்பட்டிருந்த விரக்தி நிலையை வெளிப்படுத்துகின்ற ஒரு கடிதத்தை, நூலகவியல் துறை சார்ந்து எனக்கு அறிவையும் ஆர்வத்தையும் ஊட்டிய பேராசிரியர் ஒருவருக்கு அனுப்பும் பொருட்டு, ஆங்கிலத்தில் எவரது உதவியுமின்றி நானே முயன்று வடிவ மைத்துவிட்டபோதும், அது சரியாக எழுதப்பட்டுள்ளதுதானா என்று எப்படிப் பரிசோ திப்பது எனத் திணறிக்கொண்டிருந்தபோது, என்னுடன் பணிபுரியும் சக நண்பர் சிவ பாதம் "ஏஜேயிடம் ஒருதடவை கொடுத்துத் திருத்துவோம்" எனப் பரிந்துரைத்தது மட்டுமன்றி, அவருடன் தொடர்பையும் ஏற்படுத்தித் தந்தார். ஆங்கிலத்தில் பேரறிஞர் எனப்படும் ஏஜேயிடம் கடிதம் போகப்போகின்றது என்பது தீர்மானிக்கப்பட்டதுடன்,

அந்த நேரத்து முதிர்ச்சியின்மை காரணமாகவோ, என்னைப் பற்றி அவர் குறைத்து மதிப்பிட்டு விடக்கூடாது என்ற சிந்தனையாலோ, எனது வித்துவத்தனத்தை ஒருதடவை நானே பரிசோதிப்போம் எனத் தீர்மானித்து, இலகுமொழியில் எழுதப்பட்ட அந்த மூன்று பக்கக் கடிதத்தை மிகக் கடினமான உயர்சொல்லாட்சிகளைப் பயன்படுத்தி மீள வடிவமைத்துக் கொண்டு, அதற்காக என்னை நானே மெச்சிக்கொண்டு, அவரிடம் கொண்டுபோய்க் கொடுத்தாகிவிட்டது. கடிதத்தை ஒருதடவை முழுமையாகப் படித்து விட்டு "ம்...ம் மிக நன்றாக இருக்கின்றது" எனப் பொதுவாக அவரது பாணியில் கூறிய ஏஜே, மிக மென்மையாக, மனதை நோகடிக்காத வகையில் "மொழி என்பது ஒரு தொடர்புகொள் ஊடகம். எனவே தொடர்புகொள்பவருடன் அருகிலிருந்து கதைப்பது போன்ற உணர்வு, கடிதத்தைப் படிப்பவருக்கு இருக்கவேண்டுமென்றால் அது மிகமிக எளிமையாக எழுதப்படவேண்டும். நீங்களும் அதை விரும்பினால் நாம் சிறு திருத்தம் செய்வோமா" எனக் கூறியபடி, எனது பதிலை எதிர்பாராமலேயே உயர் சொல்லாட்சிகள் அனைத்தையும் வெட்டிவிட்டு அதில் நாம் அன்றாடம் பயன்படுத்தும் சொல்லாட்சிகளைப் போட்டுவிட்டு "இப்போது மிக நன்றாக இருக்கிறது" என்றபடி திருப்பிக்கொடுத்தார். அவரது அதே எளிமையான சொல்லாட்சிகளைப் பயன்படுத்தி நான் ஏற்கனவே எழுதிய கடிதத்தின் நினைவுவர, வெட்கம்பிடுங்கித்தின்ன எழுந்து வந்தபோதும், சரியான பாதையில்தான் நானும் செல்கின்றேன் என்ற நிறைவும் என்னுள் எழவே செய்தது. இந்த அறிவின் எளிமை ஏஜேயின் அடுத்த முகம்.

அடிக்கடி நூலகத்தில் உலவும் ஏஜேயை ஒழுங்கான வாசகனாக மட்டும் நான் பார்க்கவில்லை. எமது நூலகத்தின் முன்னாள் நூலகர் அறையில் அவரை அடிக்கடி காணும் வாய்ப்பு, அடுத்த அறையில் பணிபுரிந்த எனக்கு மிக அதிகமாகவே கிடைத்திருக்கிறது. நூலகவியல் துறையின் முதுகெலும்பாகக் கருதப்படும் நூல் தெரிவு என்ற அம்சத்தில், சமூக அறிவியல் துறைசார்ந்து யாழ். பல்கலைக்கழக நூலகத்துக்கு ஏஜேயின் பங்களிப்பு அதிகம் இருந்திருக்கிறது. சமூக விஞ்ஞானம், மனிதப்பண்பியல் தொடர்பான நூல்களின் விமர்சனங்களை உள்ளடக்கிய சிறந்த ஒரு நூல் தேர்வுக் கருவியாக, 1902ஆம் ஆண்டைத் தொடக்க ஆண்டாகக் கொண்டு பிரித்தானியாவிலுள்ள Times Daily Newspaperஆல் வெளியிடப்படுகின்ற, செய்தித்தாள் வடிவில் அமைந்த Times Literary Supplement என்ற வார இதழுக்கு எங்கள் நூலகத்தில் நிரந்தர வாசகர் இருவர் மட்டுமே. ஒன்று ஏஜே, மற்றது யாழ். பல்கலைக்கழக நூலகத்தின் முன்னாள் நூலகர் திரு. சி.முருகவேள் அவர்கள். A3 அளவைவிட சற்றுப் பெரிதாக, கிட்டத்தட்ட 36 பக்கங்களில் வெளிவருகின்ற இந்த இதழ் உள்ளடக்கும் பல நூல்களுக்கான விமர்சனங்கள் சிலசமயம் இரு முழுப்பக்கங்களையும் தாண்டுவதுண்டு. இந்த விமர்சன இதழிலிருந்து கணிசமான நூல்களை யாழ். பல்கலைக்கழகத்துக்கு ஏஜே தெரிந்தெடுத்துக் கொடுத்திருக்கிறார். இலக்கியம் மட்டுமல்ல, அரசியல், வரலாறு, சமயம், கலை, பொருளியல் என்று அனைத்துப் பொருட்துறை சார்ந்தும் அவரது கரங்களால் சரி (✓) அடையாளமிடப்பட்ட



பல இதழ்கள் இன்றும் இங்கு இருக்கின்றன. அதுமட்டுமல்ல சமூக அறிவியல் துறை சார்ந்த கணிசமான நூல்கள் ஏஜே என்ற ஒரு வாசகனின் கைமட்டும் பட்ட தொன்றாகவே இருந்திருக்கின்றன. ஏஜேயைத் தவிர இதை யாருமே வாசிக்கப்போவது கிடையாது எனச் சிரித்துக்கொண்டே திரு. முருகவேள் அவர்கள் கூறுவது, இன்றும் பசுமையாக நினைவில் நிற்கிறது. "இலங்கையிலேயே சமூக அறிவியல் துறை சார்ந்து மிகச் சிறந்த நூல்களின் தொகுதி தொடர்பாக யாழ். பல்கலைக்கழக நூலகத்துக்குள்ள தனித்துவத்தை விஞ்ச வேறெதனாலும் முடியாது" என இற்றைக்குப் பத்து வருடங்களுக்கு முன்னர் குறிப்பிட்ட பேராசிரியர் சிவத்தம்பி அவர்களது கூற்று உண்மையெனில், அந்தப் பெருமையில் கணிசமானளவு பங்கு ஏஜேக்கும் உண்டு. திரு. முருகவேள் காலத்தில் தொடங்கிய இந்தப் பங்களிப்பு, முருகவேளுக்குப் பின்னரும் நூலக உதவியாளராகக் கடமையாற்றும் திரு. சிவபாதத்தினூடாகக் கணிசமானளவு தொடர்ந்திருக்கிறது. கடைந்தெடுத்த பல்வேறு துறைப்பட்ட பதினொரு நூல்களின் தேர்ந்த திறனாய்வு நூலான **மத்து**வும்கூட நூலகத்துறை சார்ந்து நோக்கும்போது, நூல் தெரிவுக்கான ஒரு சிறந்த மூலமே. வெறும் வாசகனாக மட்டுமன்றி, சிறந்த நூல் தேர்வாளனாகவும் இவரை ஆக்கியது எது என்ற எனது நீண்ட காலத் தேடலுக்கு விடை கிடைத்தது, இவரது பதிப்புப் பணியின் பெறுபேறாக அண்மையில் உருவான றெஜி சிறிவர்த்தனவின் தெரிந்தெடுக்கப்பட்ட ஆக்கங்கள் (Selected Writings of Regi Siriwardena) என்ற நூலில்தான். "டெயிலி நியூஸ் என்ற பத்திரிகையின் வண்ணப்பக்கங்களில் வெளிவருகின்ற றெஜி சிறிவர்த்தனவின் நூல்கள், திரைப்படங்கள், அரங்கு சம்பந்தமான விமர்சனங்களை 1950ஆம் ஆண்டு தொடக்கம், S.S.C. படித்துக்கொண்டிருந்த காலத்திலிருந்து, நான் படித்து வந்திருக்கின்றேன்" என இந்நூலின் முன்னுரையில் நான் வாசித்த ஏஜேயின் வரிகள் நூலை அறிதல், ஆய்வு செய்தல், அழகாக அடுத்தவர் அறியும்படி செய்தல் என்ற கலைக்கு அத்திவாரம் இற்றைக்கு அரை நூற்றாண்டுக்கு முன்னரேயே - அதிலும் பதினாறு வயதுப் பள்ளிப்பருவத்திலேயே - போடப்பட்டிருந்திருக்கிறது என்பதை உணர்த்தப் போதமானதாய்

இருந்தன. அதன் விளைவாகவே, சிறிது காலமாவது நல்ல நூல்களின் தெரிவுக்கு யாழ். பல்கலைக்கழக நூலகம் கொடுத்து வைத்திருக்கிறது. இது நூலக அறிஞராக நான் அறிந்த ஏஜேயின் அடுத்த முகம்.



மொழிபெயர்ப்புத் துறையில் சிலகாலம் ஆழமாக ஊடுருவும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. தமிழ்மொழி நூல்களின் பற்றாக்குறை காரணமாக ஆங்கில நூல்களைக் கட்டியழ வேண்டிய நிர்ப்பந்தமும், விரிவுரைகளுக்குக் குறிப்புகளைத் தரும் நாட்டமில்லாத ஒருசில விரிவுரையாளர்களும் இணைந்து பல்கலைக்கழக மாணவப் பருவத்திலேயே அடி, நுனி தெரியாமல் அதற்குள் நுழையும் நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியிருக்கிறது. நான் மட்டும் புரிந்துகொள்வதற்கான ஒன்றாக எனது மொழிபெயர்ப்பு இருந்தவரை, அது தொடர்பான தேடலும் எனக்குள் கருக்கொள்ளவில்லை. மொழிபெயர்ப்புச் சேவையானது ஆய்வு நூலகமொன்றின் முக்கிய சேவை என நூலகவியல் கல்வி போதித்த பின்னர், நானாகவே விரும்பி இதற்குள் நுழைந்த காலத்தில், மொழிபெயர்ப்பின் பண்புகள் பற்றிய தேடலில் ஏஜேயின் மொழிபெயர்ப்புகள் தட்டுப்பட்டபோதும் 'ஆங்கிலம் தெரியும் ஒருவருக்கு மொழிபெயர்ப்பதில் என்ன கஷ்டம்: வெளுத்துக் கட்டவேண்டியதுதானே' என்று அதைப் பற்றிப் பெரிதாக அலட்டிக்கொள்ளாமல் பெரும்போக்காக விட்டிருக்கின்றேன். ஆனால் இத்துறைக்குள் மிக ஆழமாக ஊடுருவும் வாய்ப்புக் கிடைத்த ஒரு காலத்தில், எனது பணி அடுத்தவரின் பயன்பாட்டுக்குப் போகப்போகின்றது என்பது அடிமனதில் உறைத்தபோதுதான், மொழிபெயர்ப்பின் நுட்பங்கள் பற்றிய தேடல் எனக்குள் கருக்கொண்டது. நல்லதொரு தமிழ் மொழிபெயர்ப்புக்கு ஆங்கில அறிவைவிடத் தமிழ் அறிவு அதிகம் தேவை என, எனது அனுபவ அறிவு இடித்துரைக்க, அதன்வழி ஏஜேயின் மொழிபெயர்ப்பாக்கங்களை நோக்கி மீண்டும் படையெடுத்தபோதுதான், அவரது தமிழ்ப் புலமையின் ஆற்றல் என்னைப் பார்த்து நகைத்தது. ஹென்றி கீசிங்கரின் Diplomacy என்ற நூலின் சில பகுதிகளை மொழிபெயர்த்த காலத்தில், ஆசிரியரின் twisted writings எனப்படும்

ஒன்றுக்கொன்று பின்னிப்பிணைந்த அந்த எழுத்துகளுக்கும் உயர் சொல்லாட்சிக ளுக்குமிடையில் சிக்குப்பட்டு நான் திண றியபோது, ஏஜேயின் இருமொழிப் புல மைக்கு, குறிப்பாக அந்தத் தமிழ்ப் புல மைக்கு, பல தடவைகள் மானசீகமாக வணக்கம் செலுத்தியிருக்கின்றேன். இது சிறந்த மொழிபெயர்ப்பாளராக நான் தரி சித்த ஏஜேயின் இன்னொரு முகம்.

"ஆங்கிலத்தில் எழுதினால் அது ஆய்வு, தமிழில் எழுதினால் அது அலட் டல்" என்று ஆங்கிலத்தை அரைகுறை யாகப் படித்தவர்களே ஆங்கிலமோகம் கொண்டு திரியும் இச்சமூகத்தில், ஆங் கிலச் சூழலில் பிறந்து, அதில் வளர்ந்து, அதையே பட்டப் படிப்பாகவும் தேர்ந்ததெ டுத்த ஏஜே, தனது மொழியைத் தலை யில் வைத்தக்கொண்டு கூத்தாடினால் அது இயல்பு. மாறாக "ஆங்கிலம் உலக மொழி என்றும், அதனைக் கைவிட்டால் நமது அறிவு வளர்ச்சி தடைப்பட்டுவிடும் என்றும், தமிழ், சிங்களம் ஆகிய சுயமொ ழிகள் மூலம் நவீன விஞ்ஞானக் கருத்து களை உணர்த்தமுடியாதென்றும், ஆங்கிலத்தைப் புறக்கணித்தால் நாம் கிணற்றுத்தவளைகள் போலாகிவிடுவோம் என்றும் காரணம் காட்டும் இந்த ஆங்கில தாசர்கள், ஆர்.எவ்.ஜோன்ஸ் எழுதிய **ஆங்கிலம் வெற்றிவாகை சூடிய வரலாறு** என்னும் நூலை வாசித்தார்களேயானால் நிச்சயமாக வியப்படைவதுடன், தங்கள் தவறான கருத்துகளையும் களைந்தெறிவர்" என்று மேற்படி நூலை அறிமுகப்படுத்தும்போது, ஏஜே தரும் அவரது சொந்தக் கருத்தானது, தாய்மொழிக்கு அவர் அளிக்கும் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டப் போதுமானது. இதற்கு மகுடம் வைத்தாற்போன்று "சிங்களச் சட்டத்தின் அநுகூலங்கள் -பிரதிகூலங்கள் பற்றிய விசாரணை தேவையில்லை. ஆனால் அச்சட்டம் காரணமாகத் தமிழ் அபிமானம் மீதூரப்பெற்றவர்களுள் நானும் ஒருவன். அந்த அபிமானமே தமி ழில் எழுதவேண்டும் என்ற எனது முனைப்பின் ஊக்கமாகவும் அமைந்தது" என **மத்து** என்ற நூலின் 'என்னுரை'யிலேயே தமிழ்மொழியின்மீதான பற்றை அவரே வெளிப்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது. சிறந்த தமிழ் அபி மானியாக மட்டுமன்றித் தமிழ்ப் புலமையாளனாகவும் நான் தரிசித்த ஏஜேயின் இன்னொரு முகம் இது.

அகிம்சாவாதிகள், அடிதடிக்கு ஒதுங்குபவர்கள் மட்டுமல்ல, புரட்சிகரமாகச் சிந் திப்பவர்கள் அனைவருமே ஏஜேயில் அதிக மதிப்பு வைத்திருக்கின்றனர். இதை நான் எனது பல்கலைக்கழக மாணவப் பருவத்திலேயே இனங்கண்டிருக்கின்றேன். பல்கலைக்கழகப் படிப்பக்கும் மேலாகச் சமூக அக்கறையுடன் ஓடித் திரியும் எனது சக தோழர்களின் உதடுகள் மிக மரியாதையுடன் அடிக்கடி உச்சரிக்கும் வார்த்தையாக ஏஜே என்ற வார்த்தை அமைந்திருந்ததை மிக ஆச்சரியத்துடன் அவதானித்திருக்கின் றேன். பல்கலைக்கழகத்துக்கு உள்ளேயும் வெளியேயும் மாறுபட்ட குணாம்சங்களைக் கொண்ட அனைவரும் ஏஜேயிடம் செல்வதைப் பார்த்திருக்கின்றேன். அதிலும் அறிவு ஜீவிகள் என்று சொல்லிக்கொள்பவர்கள் மத்தியில் சிம்மசொப்பனமாகக் கருதப்படும் திரு. உதயகுமார் அவர்களுக்கும் ஏஜேக்குமிடையில் நீண்டகாலத் தொடர்பு இருப்ப தையும் அவதானித்திருக்கின்றேன். மானுடத்தின் மேம்பாட்டில் அவருக்குள்ள

அக்கறையை அவரது எழுத்துகள் தெட்டத் தெளிவாகவே வெளிக்காட்டுகின்றமையையும் உணர்ந்திருக்கின்றேன். அப்படியாயின் ஏஜே ஒரு புரட்சிவாதியா? புரட்சிகரமாக இருப்பவர்களால் எவ்வாறு அமைதியாக, அனைவருக்கும் நல்லவராக, இருக்கமுடியும்? சிந்தனையில் புரட்சியும், செயலில் சாத்வீகமும் எவ்வாறு சாத்தியமாகும்? இந்தக் கேள்விகள் தொடர்ந்து மனதைக் குடைந்தபோது, அதுநோக்கிய எனது தேடலில் தட்டுப்பட்டதுதான், ஏஜேயின் அட்டைப்படத்துடன் வெளிவந்த 1971ஆம் ஆண்டின் யூலை மாத **மல்லிகை** இதழில் ஏஜேயின் எழுத்துலகப் பரட்சி பற்றிச் செம்பியன் செல்வன் அவர்களின் பின்வரும் வரிகள். "விமர்சனத்தில் நக்கீரர் ஏஜே. 1960ஆம் ஆண்டளவில் திடீரென மௌனியின் பெயர் இலக்கிய உலகில் அடிபடலாயிற்று. அவரது எழுத்தில் ஒன்றைக்கூடப் படித்தறியாத பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் சிலர்கூட, தங்கள் இலக்கிய வரலாற்று நூல்களில், யாரோ எப்போதோ எங்கோ கூறிய வார்த்தைகளைத் தேவமொழியாகக் கொண்டு, மௌனி சிறுகதையின் திருமூலர், விக்கிரகம், அது, இது என்று எழுதிக்கொண்டும், தமிழ் இலக்கிய உலகில் இன்றைய முன்னணி எழுத்தாளர்களான க.நா.சு., சி.சு.செல்லப்பா, தர்மு சிவராமு போன்றோர் மௌனியைத் தலையில் வைத்துக் கூத்தாடிக்கொண்டும் நின்றவேளையிலே, மௌனியின் எழுத்தைப்பற்றித் துணிவாகவும், சிந்திக்கவைக்கவும் ஏற்றதான முதல் விமர்சனக் கட்டுரையை, 'மௌனி வழிபாடு' என்ற தலைப்பில் **சரஸ்வதி**யில் எழுதிப் பரபரப் பூட்டியவர் இந்த ஏஜே."

சிந்தனையில் புரட்சியைக் கணிசமாகக் காணக்கூடியதாக இருந்த எனக்கு, செயலில் புரட்சி பற்றி அதிகம் தெரிந்திருக்கவில்லை. எழுத்துப் புரட்சியுடன் மட்டும் திருப்தியடையாது, உளவியல் ரீதியில் அவரின் வெளிப்பாடு பற்றி அறியும் ஆவலில், நூலகத்துக்கு அடிக்கடி வரும் அவரிடம் மெல்லக் கதை கொடுக்கும் போக்கும் என்னுள் அதிகரித்தது. உள்ளத்து உணர்வுகளை அப்படியே படம் பிடித்துக் காட்டும் கண்ணாடி அவரது விழிகள்தான் எனினும்கூட, நேரிய பாதையை



என்றும் நேசிக்கும் ஏஜேயிடம், குறுக்கு வழியில் செல்பவர்கள் பற்றிய பேச்சு எழும் சமயங்களிலெல்லாம், ஏற்படும் கோப உணர்வைத் திடீரெனச் செம்மை அதிகம் படர்ந்ததாக மாறிவிடும் அந்த முகம் பொதுவாகக் காட்டிவிடும். உடன்பாடில்லாத கருத்துகள் பற்றி அலசும் சந்தர்ப்பங்களில் அவரிடம் எழும் ஒருவித சிரிப்பு, முரண்பாட்டை அப்பட்டமாகக் காட்டிவிடும். அந்தச் செம்மை படர்ந்த விழிகளின் அசைவிலிருந்தே ஒன்றைப் பற்றிய அவரது உடன்பாட்டையும்

உடன்பாடின்மையையும் இனங்காணும் வல்லமை அவருடன் நெருங்கிப் பழகும் ஓரிருவருக்கு மட்டுமே உண்டு. மற்றப்படி, வார்த்தைகளால் காயப்படுத்தும் அள்வுக்கு ஏஜே குறைகுடம் அல்ல. நல்ல மனிதன், முழுமையான மனிதன் என்று அனைவராலும் போற்றப்படும் ஏஜேயின் செயல் புரட்சி தொடர்பாக எனக்குத் தெரியவில்லையா அல்லது மார்க்சியத்தைக் கரைத்துக் குடித்த ஏஜேக்கு, "புரட்சி தானாக வெடிக்கவேண்டுமே தவிர வலிந்து அதனை ஏற்படுத்தக்கூடாது" என்று எங்கோ நான் படித்த மார்க்ஸின் வரிகளில் இருந்த அதிகளவு நம்பிக்கை காரணமாக இந்த முழுமைத் தன்மை ஏற்பட்டதா? கருத்தோ, செயலோ சரியற்றதைத் துணிவுடன் எதிர்கொள்ளும் புரட்சியாளராக நான் கண்ட ஏஜேயின் அடுத்த முகம்.

வெளிநாட்டில் வதிகின்ற இணுவையூர் அன்பர்களின் ஆதரவில் உருவான நூலகமும் அரும்பொருளகமும் இணைந்த அறிவாலயம் என்ற அமைப்பின் திறப்பு விழா நிகழ்வை முன்னிட்டு மலர் உருவாக்கம் ஒன்றில் நான் முனைப்புடன் ஈடுபட்டிருந்த சமயத்தில், அம்மலரில் ஏஜேயின் கட்டுரையொன்றையும் இடம்பெறச் செய்தல் வேண்டும் என்ற எனது விருப்பைச் சிர மேற்கொண்டு, நண்பர் சூரி அவர்கள் எடுத்த முயற்சியானது "மெச்சத்தக்க முன்னுதாரணம்" என்ற தலைப்பில் அவரிடமிருந்து இருபக்கக் கட்டுரையாக வந்தபோது, சரியான முயற்சிக்குத்தான் நானும் பாடுபடுகின்றேன் என்ற மகிழ்வையும் நிறைவையும் கொடுத்தது. "அரும்பொருட் காட்சியகங்களை அமைப்பதன் மூலமாக, அடிமட்டக் குடியாட்சி போன்று, சாதாரண, பாமர மக்களின் அடிமட்ட வர்லாற்றினையும் உய்த்துணரமுடியும். இதன் மூலம் வரலாறு என்றால் அரச வம்சங்களினதும், உயர் வர்க்கத்தினரினத்தும் வரலாறு என்னும் மாயையைக் கலைத்து, வங்காள வரலாற்று ஆசிரியர் ரஞ்ஜித் குஹா (Ranjit Guha) போன்றோர் தொடங்கிவைத்த கீழ்மட்டங்களின் வரலாற்றாய்வுகள் (subaltern studies) என்ற மார்க்கத்தில் எம்மைச் செல்வதற்கு உந்தும். அப்பொழுது இதுகாறும் நாம் படித்த, படித்துவரும் 'வரலாறு' என்ற பாடம் அடித்துச் செல்லப்படும். இது குறித்து நாம் கவலைப்பட வேண்டியதில்லை." அவரது கட்டுரையிலிருந்து என்னை ஈர்த்த மேற்குறிப்பிட்ட வரிகள் புதிய சமூக உருவாக்கத்தை அவாவும் ஏஜேயின் இன்னொரு முகம்.

இறுதியாக, ஏஜே என்ற அறிவுத் துறைமுகத்தைத் தேடிப் பல தோணிகள் வந்து இளைப்பாறிப் பலன் பெற்றுப் போனமையை அனைவரும் ஏற்றுக்கொள்கின்றனர். ஆனால் இந்தத் துறைமுகத்துக்குரிய சரியான கௌரவத்தை அளிக்க ஒரு தோணியாலும் ஏன் முடியவில்லை? கௌரவிக்க விரும்பியவர்களுக்கு அதிகாரமும் ஆற்றலுமில்லை. அதிகாரமும் ஆற்றலும் இருந்தவர்களுக்குக் கௌரவிக்கும் எண்ணம் இல்லை என்று எடுத்துக் கொள்ளலாமா? அல்லது தனிச்சிங்களச் சட்டத்தால் ஏஜே என்ற தமிழ்ப் புலமையாளன் இச்சமூகத்துக்குக் கிடைத்தது போன்று, இந்த அசண்டையீனத்தால்தான், முதுகு சொறிதல்களுக்கும் முகம் மழுப்பல்களுக்கும் தலைவணங்காத அறிவின் நிமிர்வை, அள்ள அள்ளக் குறையாக அறிவூற்றை,

இறுதிவரை தாய்மண்ணையும் மொழியையும் நேசித்த மனிதனை, அறிவால், எளிமையால், குணத்தால், பண்பட்ட நடத்தையால் மற்றவர்களுக்கு முன்மாதிரியாகக் கொள்ளக்கூடிய மானுடத்தை, இந்த மண் இனங்காணும் வாய்ப்பும், தரிசிக்கும் வாய்ப்பும் கிடைத்தது எனறு ஏஜேயின் பாணியிலேயே இது பற்றிப் பெரிதும் அலட்டிக்கொள்ளாது விட்டுவிடலாமா?

கடந்த 18ஆம் திகதி (18.10.2006) புதன்கிழமை யாழ். பல்கலைக்கழக புவியியல் மண்டபத்தில் அவரது நினைவு அஞ்சலி நடைபெற்றது. அவரைப்பற்றி எவ்வளவோ கதைத்தார்கள். அவர் ஒரு சிறந்த வாசகன் என்பதால்தான் அவரைப்பற்றி இவ்வளவு கதைப்பதற்கு இருந்தது என்றோ, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அவர் இருந்த காலத்திலும் சரி, ஓய்வு பெற்று, யாழ். மண்ணில் இறுதி வரை இருந்த காலத்திலும் சரி, அவரது நேரத்தில் கணிசமானளவு யாழ். பல்கலைக்கழக நூலகத்தில்தான் கழிந்தது என்பதோ வெளிப்படுத்தப்படவில்லை. இருந்தபோதும் அவரை நல்லதொரு மனிதனாகத் தரிசித்த எத்தனையோ உள்ளங்களின் நினைவுரைகளில் மனதைக் கவர்ந்தவை இவை:

திருமதி சாந்தி விக்னராஜா: ஏஜே திருமணம் செய்திருந்தால், குழந்தைகளைப் பெற்றிருந்தால், இந்தத் தனித்துவ ஆளுமையைப் பெற்றிருப்பாரோ தெரியாது. எனவே அவர் இவ்வாறு தனித்திருந்ததுதான் ஏஜே என்ற முழு மனிதனை எமக்கு பெற்றுக் கொடுத்தது.

திரு. சோ.பத்மநாதன்: திரு. ஏஜே அவர்களுக்கும் அவரது பெருமதிப்பைப் பெற்ற சிங்கள அறிஞர் றெஜி சிறிவர்த்தனவுக்கும் பல்கலைக்கழகப் பட்டப்படிப்பில் class இல்லை. எனவே அறிஞர்களாக இருக்க வேண்டுமெனில் அவர்களுக்கு class இருக்கக்கூடாது என முடிவெடுக்கலாமா?

ஏஜேயின் உணர்வுத் தளம் சார்ந்து, பேராசிரியர் சிவநாதனது கருத்துரையின் சாராம்சம், ஏஜே தொடர்பான இந்தக் கற்றுக் குட்டியின் உணர்வலையை நிறைவு செய்ய உதவக் கூடும். "அனைத்திலும் முழுமைத் தன்மை நிறைந்த ஒரு மனிதனை குளோனிங் முறையில் உருவாக்குவதற்கான உயிரணுவைத் தெரிவு செய்யும் சந்தர்ப்பத்தில், யாருடைய உயிரணுவைச் சிபாரிசு செய்யலாம் என்று என்னைக் கேட்டால், அது ஏஜே மட்டும்தான் என்றே நான் கூறுவேன்."

ooo

எனக்குத் தெரியாமல் போன நாட்கள்

அவரது இறுதி நாட்களில் அவருக்குக் கிடைத்த நண்பர்களில் மிக வயது குறைந்தவனாய் இருக்கலாம் என்று நினைக்கிறேன். யாழ்ப்பாணத்தில் 2004 செப்ரெம்பருக்கு முன்பு யாழ். பல்கலைக்கழகத்தில் வாராந்தம் நடைபெறும் திரைப்படக் காட்சியைப் பார்க்க அவர் ஒரு தடவை வந்த போதும், பின்னர் பிரெஞ்சுத் திரைப்பட விழாவிலும், திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியில் உள்ள கடைக்கு அவர் பத்திரிகை வாங்க வருகின்ற போதும், அவரைப் பார்க்க முடிந்தது.

அவரது உடல் நிலை பாதிக்கப்பட்டுச் சிகிச்சைக்காகக் கொழும்பில் தங்கியிருந்த காலத்திலேயே அவருடன் உரையாடும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. லண்டனில் இருந்து பத்மநாப ஐயர், நேரம் கிடைக்கின்றபோதெல்லாம் அவரைப் போய்ப் பார்க்கச் சொல்லுவார். இவ்வருட ஆரம்பத்தில் றொஸ்மீட் பிளேசில் அவர் வசித்த வீட்டிற்கு, சிங்கப்பூரிலிருந்து வந்திருந்த ஈழநாதனுடன் சென்றேன். தனது கைத்தடியை ஊன்றியவாறு வந்து கதிரையில் அமர்ந்து, நாம் கேட்டதற்கெல்லாம் அவருக்கே உரித்தான இயல்பான நளினத்தோடு பதில் தந்தார் - உரையாடினார். அவரது நேர்காணல் ஒன்றை ஒலிப்பதிவு செய்ய விரும்பியிருந்தேன்.

பல மாதங்களுக்கு முன்னார் ஏ.ஜே.கனகரட்னாவால் தொகுக்கப்பட்ட றெஜி சிறீவர்த்தனவின் கட்டுரைகளின் இரண்டாவது தொகுதி வெளியீட்டு விழா ICES

பா.துவாரகன்

கொழும்பில் சுகாதார அமைச்சில் பணிபுரியும் இவர் ஊடகத்துறை, புகைப்படக் கலை, திரைப்படம் ஆகியவற்றில் ஈடுபாடு உடையவர்.

(சர்வதேச இனத்துவக் கற்கை நிலையம்)இல் நடைபெற்றது. அந்த நிகழ்வை டிஜிட்டல் ஒலிப்பதிவு கருவி மூலம் ஒலிப்பதிவு செய்ய முடிந்தது.

றெஜியின் Politics and Society வெளியீட்டு வைபவத்தின்போது, ராகிகா குமாரசுவாமி தனது தலைமையுரையை 5 நிமிடங்களில் நிறைவு செய்கின்றார். 1989 – 90 களில் றெஜியின் மாணவியாக இருந்த நெலுக்க சில்வா பசுமையான நினைவுகளை மீட்க; 'சண்டே ஒப்சேர்வர்' ஆசிரியர் பீடத்தைச் சேர்ந்த அஜித் சமரநாயக்கவும், பனோஸ் (Panos) அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஏ.எஸ்.பன்னீர்ச்செல்வனும் தங்களது உணர்வுகளை, அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டனர். இறுதியாக ஏ.ஜே. கனகரட்னா, தான் எழுதி வந்த குறிப்பை இருந்த இடத்தில் நின்றவாறே வாசித்தார். இங்கு அனைவருமே 10 - 15 நிமிடங்களில் தங்களது உரையை நிறைவு செய்துவிடுகின்றனர்.

றெஜி சிறிவர்த்தனவுக்குக் கலைகள், இசை மீது உள்ள ஈடுபாடு காரணமாக உரையாளர்கள் ஒவ்வொருவரதும் பேச்சு நிறைவடைந்ததும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த நிகில் நாராயணின் புல்லாங்குழல் இசைக்கோலம் (musical interlude) பியானோ, மிருதங்கத்துடன் இணைந்து காற்றில் பரவி றெஜியின் நினைவுகளை மீட்டன. இன்று அந்த ஒலிப்பதிவை மீளக் கேட்கின்றபோது ஏஜேயின் நினைவுகள் மீள்கின்றன.

இந்நிகழ்வு நடைபெற்ற அடுத்த வாரம் ஏ.ஜே.கனகரட்னாவைச் சந்தித்தபோது, ஒரு மணி நேரத்தில் நிறைவடைந்த அந்த நிகழ்வு என்னை ஈர்த்தது பற்றி, அவரிடம் தெரிவித்தேன். இப்படி ஓர் இலக்கிய நிகழ்விற்கு இதற்கு முன்னர் சென்றதில்லை என்றும், கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற சில நூல் வெளியீடுகளையும், யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நூல் வெளியீடுகளையும் நினைவு கூர்ந்து அவரிடம் தெரிவித்தபோது ஏஜே, "இதனால்தான் நான் முதுகு சொறிகின்ற - ஒருத்தரை ஒருத்தர் புளுகிக் காலத்தை வீணடிக்கின்ற நிகழ்வுகளுக்குப் போவதில்லை" என்றார். றெஜி சிறிவர்த்தனவின் நூல் வெளியீட்டில் முதற் பிரதியோ, சிறப்புப் பிரதிகளோ வழங்கப்படவில்லை.

ஒருதடவை அவரிடம் The Bridge of the San Luis Ray என்ற திரைப்படத்தைப்

பற்றி உரையாடினேன். அது ஒரு நாவலை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது. 5 வருடங்களிற்கு முன்னர் இதன் மொழிபெயர்ப்பைச் சுன்னாகம் நூல் நிலையத்தில் இரவல் பெற்றுப் படித்திருந்தேன். முறிந்த பாலம் என்ற அந்த நாவல் - 1714இல் ஜூலை 20 பெருநாட்டின் லீமா நகருக்கும் கஸ்கோ நகருக்கும் இடையிலுள்ள கொடிப்பாலம் அறுந்து விழுந்து, அதில் சென்று கொண்டிருந்த 5 பேர் இறக்கின்றனர். நாவலில், இவர்களுடைய வாழ்க்கையை ஆராய்ந்த பாதிரியார் ஜூனிப்பர், புத்தகங்களுடன் உயிரோடு எரிக்கப்படுகின்றார். இவர்களது வாழ்க்கையை - இறந்த காலத்தை ஆராய்கிறது 'முறிந்த பாலம்'. இதை ஏஜேயிடம் தெரிவித்தபோது, உடனே அவர் சொன்னார், "இது தோர்ன்டன் ஒயில்டெர் எழுதிய நாவல்" என்றும், பல ஆண்டுகளுக்கு முன் படித்ததாகவும் நினைவு கூர்ந்தமை, எனக்கு வியப்பளித்தது.

இறுதியாக ஏஜேயைப் பார்த்து உரையாடியது ஆவணி 29இல். அன்று மாலை 5.30 இற்கு ICES இல் Tsotsi என்ற தென்னாபிரிக்கத் திரைப்படம் திரையிடப்பட இருந்தது. ஏஜேயையும் அழைத்துச் செல்லலாம் என்று சென்றேன். உடல்நலம் பாதிக்கப்பட்டுத் தன்னால் வரமுடியாமல் இருப்பதாகவும், தம்பிராஜாவிடம் தெரிவிக்குமாறும்

என்னிடம் கேட்டிருந்தார். ஷியாம் செல்வதுரையின் நேர்காணல் வந்த **காலம்** சஞ் சிகையை அவரிடம் கொடுத்து, ஷியாமைப் பாதித்த – அனிட்டா தேசாயின் புத்த கங்களைப்பற்றிச் சொன்னேன். "அனிட்டா தேசாய் ஒரு பிரெஞ்சுக்காரர்" என்றும் ஷியாம் செல்வதுரையின் Funny Boyயைப் படித்திருந்ததாகவும் ஷியாம் 'அப்படியான' விடயங்களையே எழுதியுள்ளதாகவும், Cinnamon Garden படிக்கவில்லை என்றும் சொன்னார்.

மு.பொ. கேட்டுக்கொண்டதால், Third Eye இதழுக்கென, மு.புஷ்பராஜனின் **மீண்டும் வரும் நாட்கள்** கவிதைத் தொகுப்பிற்கு ஏஜே எழுதிய விமர்சனத்தை, மொழிபெயர்க்க வேண்டிய தேவை எனக்கு ஏற்பட்டது. சில சொற்றொடர்களை மொழிபெயர்க்க முடியாமல் போனது. இறுதியில் அந்த மொழிபெயர்ப்பை மு.பொ. திருத்தி, செப்பனிட்டு **காலம்** இதழுக்கு அனுப்பியிருந்தார்.

புரட்டாதி 29, தீபா மேத்தாவின் The Republic of Love என்ற திரைப்படத்தைப் பார்வையிடச் சென்றபோது, ஏஜே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இரு வாரங்கள் என்ற செய்தியை தம்பிராஜா மூலம் அறிந்தேன். ஒக்டோபர் 8ஆம் திகதி வைத்தியசாலையில் ஏஜேயைப் பார்த்தபோது அவரால் உரையாட முடியவில்லை.

இறுதி நாட்களில் அவருக்கு உதவியாக இருந்த ஜெயலத் என்ற நண்பர், ஏஜே தன்னிடம் இருந்த இரு அகராதிகளையும் பிள்ளைகளிடம் கொண்டுபோய்க் கொடுக் குமாறு சொன்னதாகவும், எப்படியும் பிள்ளைகளுக்கு ஆங்கில மொழியைப் படிப்பிக்கு மாறும் சொன்னதாக ஏஜேயை நினைவு கூர்ந்தார்.

தனிமையில் இருந்த அவரை, வாரத்தில் ஒரு நாளாவது சந்தித்து உரையாட விரும்பியும், முடியாமல் போய், இருமாதங்களின் பின் சந்தித்துத் திரும்பும்போது,

நீண்டநாட்களாக அவருடன் உரையாடாது விட்ட வருத்தம் ஏற்படும்.

ஏஜே யாழ்ப்பாணத்தில் இருந்த நாட்கள் எனக்குத் தெரியாமலே போய்விட்டன.

○○○

AJ – THE MAN AND HIS WORLD

Chelva Kanaganayakam
Professor in English
Trinity College, University of Toronto
Canada

I am deeply honoured to say a few words on this occasion about my colleague and friend A.J.Canagaratna. First he became a colleague when both of us served as instructors in the mid 70s at the University of Jaffna. He was a senior colleague, and although he taught language and I taught literature, we were both part of the same program and shared the same space. After classes, we would meet in the department office where he would typically be seated at his desk, immersed in a book by a Russian, German, French or American author. Many of the texts he read were unfamiliar to me, and it was not in his nature to tell us what he read or why he read. Not that he was unwilling to share his thoughts, but he was not a demonstrative person. What he felt about authors or texts became clear if we engaged him in conversation or if we read his essays and reviews. On many occasions I had asked him to teach literature, and he always politely declined. To this day, his refusal to teach a subject that was dearest to his heart has been something of a mystery. Even thirty years ago he was a comparativist, and very few could match his knowledge of both Western and Tamil literature. As with dozens of others, he would oblige me by reading my essays, and his comments, always given promptly, were thoughtful, precise, and unfailingly tactful.

It was then not possible to consider AJ simply a colleague. He quickly became a trusted and sincere friend. I remember at least three projects that required his help, and in all three cases, he went out of the way to make that possible. I know I would not have met Sornalingam or interviewed him if I had not been taken to his house by AJ. I would not have had access to Alagu Subramaniam's manuscripts if AJ had not made the necessary contacts for me. My monograph about literary criticism would have remained unpublished if AJ had not intervened. Over the five year period that we shared the same space, I must have got his help on numerous occasions, and he never asked me for any kind of assistance.

In the last thirty years, we have interacted intermittently, largely because both of us were interested in translations. Many of his translations enabled us to put together the volume that came out with the title ***Lutesong and Lament***. Now we are in the process of putting together a festschrift for AJ. I am sure you will be amazed when reading the book, as I was, at the tributes that have arrived from such a range of people – artists, scholars, journalists, friends, co-workers – about him. We are hoping that this volume, that contains not only what AJ wrote but also what has been written about him, will be something that you will want to own. This book will be a testimony to the life and career of an amazing man, worthy of our deep admiration and respect.

In the last few weeks, literally dozens of tributes have appeared from all parts of the world. It has been humbling to think that someone who was so reserved and unostentatious could touch the hearts of so many. Many of these tributes have touched on AJ's contribution as a critic, editor, scholar, translator, and cultural critic. And these, one agrees, are totally appropriate. It is not easy, given the conditions in Jaffna, to work so consistently and so passionately, to produce such

an impressive body of material.

But this is not what I wished to speak about today. I say this not because I wish to downplay in any way, AJ's contribution. My introduction in the forthcoming collection gives a detailed account of why AJ's contribution is both timely and seminal. But when I was asked to speak today, I knew intuitively that there was something else that I wanted to focus on. I have known AJ for thirty years, and it is really in the last few weeks, after he died, that I tried to understand why he meant a great deal to me. He was, by conventional standards, an unconventional man. He was single, he did not own a house or a car, and he never climbed the academic or professional ladder. Material success meant little to him, although they were well within his reach. As a man from Jaffna, he was hardly a role model, and strangely enough, he never left Jaffna. He was what I would like to call a religious atheist, a devout secularist, and it is this paradoxical aspect of his character and life that struck me as particularly important. Many of us who were more typical products of Jaffna society also left Jaffna, while he, who was very much an outsider, chose to remain. For those of us who were shaped by the values of Jaffna society, it was difficult to reconcile ourselves to the awareness that the world we knew was falling apart. Hence we left, to recreate elsewhere an image of what we remembered. AJ created a space for himself on the margins, and that world gave him the latitude and resilience to remain rooted to the land.

There were several occasions, during the time he was an instructor, when he had problems with the administration. When that happened, he would quietly type out a letter of resignation, submit the letter, and walk away. No fuss, no argument, no bitter recrimination. He slipped out quietly, although he had no savings, no prospects, and no clear sense of what the next day would bring. If one had lived in Jaffna, one would know that it took immense courage to adopt that attitude. He also understood that not many of us were capable of that detachment. When I took my own concerns to him, he would listen with sympathy, and provide the kind of advice I needed. He knew that going quietly into the day was not for all of us. He was free, because in a society that placed great faith in acquisitions, he needed nothing. We wanted our jobs, our homes, our careers, and our families. We were judged on the basis on these attributes, and society rewarded those who could demonstrate the ability to succeed on these terms. AJ chose not to play this particular game, but because he remained on the margins without drawing any attention to himself, we did not realize that he saw life with the kind of clarity that we were incapable of.

And this is probably why when many of us felt that it was no longer possible to remain in Jaffna, the thought of emigration never entered his mind. Even for a brief visit, he did not wish to leave. He was not a nationalist in the traditional sense of the term, in the same way that he was not a believer in the traditional sense of

the term. He belonged to a particular place and a particular time, but with an awareness and appreciation of the outside world. These particular places and times were never without problems, conflicts, changes and paradoxes. He could embrace changes because he was not wedded to the idea of a static society. He knew that it was possible to be religious without being a fundamentalist, and he knew that it was possible to be traditional without being a traditionalist. He was capable of both irony and commitment. Many of us are incapable of coming to terms with the fact that the world we know does not always conform to our scale of values. When we encounter a disruption to what we want, then we become frustrated, and we often leave. But AJ was able to embrace change with the clarity of vision that only a few are capable of. It is a strange irony that by living a life that was the very antithesis of what Jaffna Tamils valued, he also demonstrated what it actually means to be a good Tamil person. AJ had the courage to live this life, and I am truly humbled by that sense of commitment he showed throughout his life. His was a less travelled path, but it was also that path that leads to the heart of our society and our culture. The regeneration of our culture depends on those are willing to open windows, not shut them. I am grateful that AJ was in our midst, and I will always remember him as a decent and fair-minded man – in the best sense of the term. Thank you.

○○○

கனடா, ரொறான்ரோவில் 'காலம்' சஞ்சிகையின் சார்பில், ஒக்டோபர் மாதம் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை ஸ்காபரோ சிவிக் சென்ரரில் நடைபெற்ற ஏ.ஜே. கனகரட்னாவின் அஞ்சலிக் கூட்டத்தில், பேராசிரியர் செல்வா கனகநாயகம் ஆற்றிய உரை இதுவாகும்..

அன்புடன் பத்மநாப ஐயருக்கு,

ஏஜே பற்றிய தொகுப்பு ஒன்றுக்குக் கேதாரநாதன் எழுதிய கட்டுரையை நீங்கள் கேட்டதாகத் துவாரகன் சொன்னார். இத்துடன் கேதார்நாதனுடைய கட்டுரையை இணைத்துள்ளேன். வைத்தியசாலையில் ஏஜேயை இறுதியாகச் சென்று பார்த்த இரு சந்தர்ப்பங்களிலும் இப்படி ஒரு துர்ப்பாக்கியமான சம்பவத்தை நான் எதிர்பார்க்கவில்லை. அவருடைய குரலில் இருந்த உற்சாகமும், அவர் பல்வேறு நண்பர்களை நினைவுகூர்ந்து கேட்ட விதமும் என்னுள் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தியிருந்தது. ஆனால், அதற்கு முன்னர் கொழும்பில் அவர் தங்கியிருந்த அவருடைய சகோதரர் வீட்டில், பௌசருக்காக ஒரு நேர்காணலுக்குப் போயிருந்த போது, அவர் இவ்வளவு உற்சாகமாக இருக்கவில்லை. பெயர்களையும் சம்பவங்களையும் நினைவுகூரச் சிரமப்பட்டார். தொடர்ந்து உரையாடுவதும் சாத்தியமில்லாமல் இருந்தது. ஆனால், வைத்தியசாலையில் அவர் படுத்திருந் தாலும் களைப்பு வரும்வரை உரையாடினார், அதே நகைச் சுவை உணர்வுடன். அவருடன் சில உரையாடல்களை வீடியோவில் பதிவு செய்யலாம் என மனக்கணக்குப் போட்டிருந்தேன். துரதிஷ்டம் அந்தக் கணக்குத் தப்பாகி விட்டது. மலையகத்தைச் சேர்ந்த கே.கணேஷ், ஏஜே என்று எங்களுடைய மூத்த தலைமுறை ஒன்றின் தடங்கள் எவையும், எந்தப் பதிவும் பெறாமல் போய்க்கொண்டிருப்பது கவலை தருகிறது. குறைந்தபட்சம் நீங்களாவது இவ்வளவில் முயல்வது ஆறுதல் தருகிறது. உங்களுடைய முயற்சிக்கு எமது ஆதரவு என்றும் உண்டு.

அன்புடன்

சிவகுமார் (சரிநிகர்)

ஏ.ஜே.கனகரட்னா

தேசிய இலக்கியம்: சில சிந்தனைகள்

'தேசிய இலக்கியம்' என்ற யுத்த அழுகுரல் நம் மத்தியில் எழுப்பப்பட்டுள்ளது. இக்கட்டுரையில், அதனைப்பற்றி, என் சிந்தனைகள் சிலவற்றைச் சமர்ப்பிப்பதே, என்னுடைய நோக்கமாகும்.

இச்சொற்றொடர், ஒரு தேசத்தினால் உருவாக்கப்பட்ட இலக்கியப் படைப்பு உருவமனைத்தையும் குறிக்குமென ஓர் அகராதி இலக்கணம் சொல்லலாம். அத்தகைய அர்த்தச் சூத்திரம், பொருள் விளக்கத்தைப் பொறுத்த அளவில் சரியாகவும் இருக்கலாம். ஆனால், ஒவ்வொரு நாட்டு இலக்கியத்தின் தனித்தன்மைகளைக் கூர்ந்து ஆய்ந்து இலக்கணம் சொல்லப் புறப்படும் இலக்கியக் குணமாய்வோனுக்கு இப்பதவுரை திருப்திதர மாட்டாது. குணமாய்வோன் அமெரிக்க இலக்கியத்திலுள்ள 'அமெரிக்கத்தனம்' என்றோ, இந்திய இலக்கியத்திலுள்ள 'இந்தியத்தன்மை' என்றோ பேசும் பொழுது, வேற்று நாட்டு இலக்கியங்களுடன் ஒப்புநோக்கிப் பார்த்துக் கிரகித்துக் கொள்ளும் தனித்துவ வேறுபாட்டுத் தன்மைகளை வைத்தே, தேசிய இலக்கியம் என்பதற்கு அர்த்தம் பாய்ச்ச உத்தேசித்திருக்கிறேன். ஆங்கில நாட்டின் தற்கால இலக்கியக் குணமாய்வோரான எவ்.ஆர்.லீவிஸ், 'ஆங்கில இலக்கியத்தின் விழுமியப் பாரம்பரிய'த்தினை வேறுபடுத்தித் தனித்துவமாகக் காட்டும் தனி இயல்புகளை வகுத்துக் காட்டும் முயற்சியில், ஆங்கில நாவலிலக்கியத்தின் சிறப்பியல்புகள், "அனுபவத்திற்கான பிரதான திராணி, வாழ்க்கைக்கு முன்பாக வைத்துள்ள ஒருவகை ஆசாரத் தெளிவு, நெருக்கமான நன்னெறிக்குறி" ஆகியனவெனச் சொல்லுகிறார். சிறந்த எழுத்தாளர் ஃ.வுலபேருடன் ஒப்பு நோக்குகையில், "ஃ.வுலபேர், குஷ்டரோகிகளை·

நோக்குவதைப் போன்று வாழ்க்கையைத் தொலைவிலிருந்து நோக்குகிறார்; ஆனால், சிறந்த ஆங்கில நாவலாசிரியர்கள் (ஜேன் ஒஸ்ரின், ஜோர்ஜ் எலியட், கொன்றாட், டி.எச்.லோறன்ஸ் ஆகியோர்), .'.வுலபேரைப் போல் வாழ்க்கையை வெறுப்புடனோ, அலுப்புடனோ, நிந்திப்புடனோ நோக்கவில்லை" என்கிறார். தேசிய இலக்கியத்தின் மனோபாவனை, சாதாரணமாகப் பல்வேறு நாடுகளின் இலக்கியங்களை மட்டுமே குறிக்காது, ஒரு நாட்டின் இலக்கியத்திற்கு விசேடமாக அமைந்துள்ள தனித்தன்மைகள், மனோ உணர்வின் பிரகாரம், பிரகரணங்கள், பாணி முதலியவற்றையும் குறிக்கும். சுருக்கமாக ஒவ்வொரு நாட்டின் இலக்கிய வளர்ச்சியிலும் ஆதிக்கம் செலுத்திய பாரம்பரியங்கள், வழக்கச் சிறப்பியல்புகள் ஆகியவற்றையும் குறிக்கும். இலக்கியம் அவாந்திரத்திலிருந்து தோன்றுவது கிடையாது; அது காலத்திலும் இடத்திலும் வேரூன்றித் தழைக்கிறது. எனவே, அது ஒரு தேசியத் தனித்துவத்தை, தேசிய சுபாவத்தை, தேசிய வல்லபத்தைப் பிரதிபலிக்கத்தான் செய்யும். இதன் வழியே, ஒரு தேசிய இலக்கியம், வேற்று நாட்டு இலக்கியங்களுடன் தன்னை வேறுபடுத்தும் சில விசேட தனித்தன்மைகளைப் பெற்றுத்தானிருக்கும். வாழ்க்கைத் தனித்துவ அம்சங்கள், மரபுகள், உருவம் முதலியன, இந்திய இலக்கியத்தை அமெரிக்க இலக்கியத்திலிருந்து வேறுபடுத்துகின்றன. வாசகரெல்லோரும் இருநாட்டு இலக்கியங்களினதும் முழு 'உணர்வும்' முற்றிலும் வேறுபட்டிருப்பதை ஒப்புக் கொள்வார்கள். இது சுயமாகவே விளங்கிக்கொள்ளக்கூடிய விடயமென்பதனால், இதனை மேற்கொண்டும் விளக்கவேண்டிய வியர்த்தத்தில் நான் ஈடுபடவில்லை. இருப்பினும், 'தேசிய இலக்கியத்தைப் பற்றிக் குணமாய்வோனுடைய மனோபாவனை' அகராதி அர்த்தத்திலும் பார்க்க ஆழமானது என்பதை மட்டும் சொல்லிவைக்கப் பிரியப்படுகிறேன்.



தேசிய இலக்கியத்திற்குத் தாகம் ஏற்பட்டிருக்கும இன்றைய காலகடடத்தில், அமெரிக்க நாட்டின் ஒப்பைக் குறிப்பிடுவது சுவாரஸ்யமுள்ளதாகவும் விளக்க முள்ளதாகவும் அமையும். இந்த ஒப்பை அதிகம் இழுத்து விரிவாக்கக்கூடாது என்பது வாஸ்தவம். அமெரிக்கர்கள் சுதந்திரத்திற்காக இங்கிலாந்துடன் யுத்தம் செய்தனர். அத்தகைய சுதந்திரத்திற்காக நாம் தென்னிந்தியாவின்மீது போர்ப்பிரகடனம் செய்யவில்லை. நாமும் தமிழ்நாடு ராஜ்யத்தாரும் ஒரே மொழியினைப் பேசுவதைப்போன்றே அமெரிக்கரும் ஆங்கிலேயரும் ஒரே மொழியைப் பேசுகிறார்கள். 1818ஆம் ஆண்டில் எடின்பரோ மதிப்புரையில் ஸிட்னி ஸிமித் எழுதும்பொழுது, "ஏன் அமெரிக்கர்கள் புத்தகம் எழுதவேண்டும். ஆறு வாரப் பயணத்தில் நமது மொழி, நமது உணர்வு, நமது விஞ்ஞானம், நமது வல்லபம் முதலியவற்றைச் சிப்பங்களிலும் பீப்பாய்களிலும், அவர்களுக்கு அனுப்பி வைக்கும்பொழுது?" என்று கேட்டார்.

ஆனால் வரலாறு அவருக்குப் பதிலளித்து விட்டது. அமெரிக்கா சுதந்திரம் அடைந்த பின்னர், தாங்கள் தனியொரு 'பூரணம்' என்ற உணர்வு அவர்களுக்கு ஏற்பட்ட பின்னர், அமெரிக்க எழுத்தாளர், ஆங்கில இலக்கியத்தின் செல்வாக்கு இருந்தாலும், தனித்துவமுள்ள அமெரிக்க இலக்கியம் படைக்க வேண்டுமென்று விரும்பினார்கள். வேறொரு தேசத் தோற்றங்களும், வேறு பிரகரணங்களும் இவர்களுடைய பூர்வபோதகமாக இருந்தாலும், அவர்கள் வேறொரு சமுதாய அமைப்பில் வாழ்ந்ததினாலும், அவர்களுடைய படைப்புகள் தனித்தன்மையுள்ளனவாகத்தான் திகழ்ந்தன. தனி இயல்புகளுடன்கூடிய அமெரிக்க இலக்கியத்தைத் தோற்றுவிப்பதில் அமெரிக்கர் அடைந்துள்ள வெற்றியினால், இங்கிலாந்தும் அமெரிக்காவும் ஒரே மொழியினால் பிரிக்கப்பட்ட இரு நாடுகளென்ற ஷாவின் அங்கதக் கூற்று, இலக்கிய அரங்கத்தைப் பொறுத்த அளவில் வெகுவாகப் பொருந்திவிட்டது. இன்றைய ஆங்கில இலக்கியத்தில் நிகழ்ந்துள்ள பல அதிசயங்கள் அமெரிக்காவில்தான் நடந்தேறின. யுத்தத்திற்குப் பிற்பட்ட தலைமுறையில், ஆங்கில இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றவர்கள், எலியட் (இவர் தற்போது பிரிட்டனில் பதிவுப் பிரஜையாகியுள்ளார்.), ஹெமிங்வே, ஃபோக்னர் ஆகிய அமெரிக்கர்தாம். இந்த நூற்றாண்டில், அமெரிக்க எழுத்தாளருக்கும் கவிஞருக்கும் ஈடு இணையானவர்களை இங்கிலாந்து உருவாக்கவில்லை. இன்று ஸிட்னி ஸிமித்தினுடைய அவமதிப்பான நிந்தனைக் கேள்வியைத் திருப்பிப் புரட்டி, "'ஏன் பிரிட்டிஷ்காரர் புத்தகங்கள் எழுத வேண்டும்" என்று கேட்கலாம்.



தென்னிந்திய ஸிட்னி ஸிமித் எவனும், "ஏன் இலங்கைத் தமிழர் எழுதவேண்டும், சில மணிநேரப் பயணம், நமது மொழி, நமது உணர்வு, நமது இலக்கியம், நமது வல்லபம் முதலியவற்றை இவர்களுக்குக் கொண்டு போகும்பொழுது?" என்று வெளிப்படையாகத் துணிந்து கேட்கவில்லை. இருப்பினும், அத்தகைய ஒரு போஷக மனோபாவம் நிலவி வருவதுதான் "இந்தியா தாய் நாடு. ஈழம் சேய் நாடு" என்று எழுப்பப்பட்டுள்ள கோஷத்தின் உட்தாற்பரியம். ஸிட்னி ஸிமித்தினுடைய வெளிப்படையான நிந்தனை, இந்த வெறுக்கத்தக்க இருட்டடிப்பு மனோபாவத்திலும் பார்க்க வரவேற்கத் தக்கது. தாங்கள் பெரியவர்களென்ற தமிழகப் போஷக மனோபாவம் இறுதியில், இன்றாகிலும் ஈழத்தில் ஒரு விழிப்பை ஏற்படுத்தியுள்ளது. இன்று, நாம் நமது எழுத்தாளனின் படைப்புகள், நமது அனுபவங்கள், நமது பகைப்புலங்கள், நமது மரபுத் தொடர்கள், நமது பேச்சுத்தமிழ், நமது சமூக அமைப்பு ஆகியவற்றை எதார்த்தமாகப் பிரதிபலிக்கும் வண்ணம் அமைய வேண்டுமென வற்புறுத்துகிறோம். இத்தேசிய இலக்கிய

ஆக்கத்தேவை பல காரணங்களின்பால் எழுந்துள்ளது. நாம் சுதந்திரமடைந்ததும், தேசிய உணர்ச்சி வளர்ந்ததும் அக்காரணங்களுள் இரண்டாக இருக்கலாம். அரசியல் மாற்றம் இலக்கிய மறுமலர்ச்சியை அல்லது இலக்கியப் 'புரட்சி'யைத் தோற்றுவிக்கக் கார்ணமாகவும் தூண்டுதல்காகவும் அமைந்தது. அரசியல் சமூகக் காரணங்களை விடுத்து, விசேடமான இலக்கியக் காரணங்களும் இருக்கின்றன. ஒரு கட்டத்தில் நமது சஞ்சிகைகளும் பத்திரிகைகளும் தென்னிந்தியப் போட்டியினால் கர்ப்பச் சிதைவாயின (இன்றைக்கு நிலை பிரமாதமாக முன்னேறாவிட்டாலும்கூட, சீரடைந்துள்ளது). இதனால், நமது எழுத்தாளர் தென்னிந்தியப் பத்திரிகைளில் பிரசுரிக்கவேண்டுமென்ற மனோபாவத்தில் எழுத வேண்டியிருந்தது. தென்னகப் பத்திரிகைகளில் பிரசுரிப்பது கவர்ச் சிகரமாக்கப்பட்டது. இந்தியப் பத்திரிகைகளில் இடம்பெற, நமது எழுத்தாளர் சில செயற்கையான நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட வேண்டியிருந்தது. இந்தியப் பகைப்புலங்கள், பேச்சுமரபு, அல்லது 'இந்தியத்தன்மை' கொடுத்து எழுத வேண்டியிருந்தது. சுயகௌரவ முள்ள எந்த எழுத்தாளனும் இதனை நீண்ட காலத்துக்குச் சகிக்க மாட்டான். இது தவிர்க்க இயலாத, இயல்பான எதிர்விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன. எதிர்த் துருவ ஸ்தானத்திற்கு விவகாரம் இடம் பெயர்ந்துவிட்டது. தேசிய இலக்கிய கோஷம் ஈழத்தில் பெற்ற உக்கிரம், கல்விப் பத்திரிகையைக்கூட 'ஈழத்து வாழ்க்கை அழகுகளையும், மண் வாசனை கொண்ட பிராந்தியச் சூழல்களையும் பிரதிபலிக்கும்' கதைகளுக்குப் பரிசுகளும் பாராட்டுதல்களும் கொடுக்கத் தூண்டிற்று. இந்த எழுச்சிக்கு இன்னொரு காரணமும் உண்டு. வாசகர், கதைகளில் அதிகமாக எதார்த்த சூழலை எதிர்பார்க்க விழைந்தனர். ஆனால் இவையெல்லாவற்றிற்கும் அச்சாணியான காரணம், 'தமிழ் கூறும் நல்லுலகம்' என்பதன் ஓர் அங்கமாக நாம் இருந்தாலும், நமக்கென்ற விசேட தனிக்குணங்களுள்ள தனித்துவமான ஒரு தேசிய இனம் நாம் என்ற இயல்பான விழிப்புணர்வு ஏற்பட்டு விட்டதுதான். 'தமிழ் நாடு தாய்நாடு, ஈழம் சேய்நாடு' என்ற 'பூசாரி மந்திர'த்தைக் கிளிப்பிள்ளையாகச் சொல்பவர்கள், சேய்கள் எப்பொழுதுமே தாயின் முந்தானை முடிச்சில் தொங்கிக்கொண்டிருக்க முடியாது என்ற உண்மையை உணரவேண்டும். பக்குவ ஞானம் வளர, தான் இன்னமும் தன் கொப்புள் கொடி மூலம் தாயின் உணவினைப் பங்கிட்டு வாழமுடியாது என்ற பிரக்ஞையின் பால், தன் சொந்த இலட்சிய, அபிலாஷைகளுக்கேற்ப ஒரு தனித்துவச் சுதந்திர வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முனைய வேண்டும். ஆகையினால், தேசிய இலக்கியம் தேவை என்ற எழுகுரல், நமது தனித்துவ இலக்கியப் பாரம் பரியத்தினைக் கட்டிவளர்க்க வேண்டுமென்ற வேட்கை, மிக இயற்கையானதும், தவிர்க்க முடியாததுமான ஒன்றாகும். இது

நமது பக்குவ வளர்ச்சியைக் குறிக்கும் நல்ல அறிகுறி. நாம் தென்னிந்திய இலக்கியச் செல்வாக்கினை வேர்கல்லி எறிய விழைகிறோம் என்று அர்த்தமில்லை. தமிழக இலக்கியச் செல்வாக்கினை அனுபவித்துக்கொண்டே, நாம் நமது அனுபவங்களிலும் மண்ணிலும் வேர்விடும் தனித்துவம் பெற்ற இலக்கியத்தினைப் படைக்கும் பிரயத்தனத்தில் ஈடுபட்டிருக்கின்றோம். யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய சகல பிராந்திய அனுபவங்களுடைய நானாவிதங்களையும் வேறுபாடுகளையும் நமது சிருஷ்டிகள் பிரதிபலிக்க நமது எழுத்தாளர் பார்த்துக் கொள்ள வேண்டும்.

நாம் தேசிய இலக்கியத்தை வெற்றியாக அமைத்து விட்டோம் என்பதை நம்மால் தீர்க்கமாகச் சொல்ல முடியாது. நாம் இன்னமும் எவ்வளவோ முன்னேற வேண்டியிருக்கிறது. அதனை இப்பொழுதுதான் கட்டிக் கொண்டிருக்கிறோம். ஊருக்குரிய வர்ணனைகள் சிலவற்றை (கதைக்கு இசைவானதா இல்லையா என்பதைக்கூடக் கவனியாது) சொருகி, பிராந்தியப் பேச்சு வழக்கை உபயோகித்து, இட்த்திற்கு உரித்தான இனப் பிரச்சினைகளைப் போன்ற பிரகரணங்களைச் (themes) சேர்த்தால், தேசிய இலக்கியம் தோன்றிவிடுமெனச் சிலர் பிசகாகக் கருதியிருக்கின்றனர். சந்தேகமின்றி இவை தேவையான அம்சங்களாக இருப்பினும், எழுத்தாளருடைய கடமை இன்னும் அடிப்படையானது. அவன் (எழுத்தாளன்) ஊருக்குரிய நிலங்களை மட்டுமல்ல, அந்தச் சூழலில் வாழும் மனிதனைச் சித்தரிக்கிறான். பிராந்தியப் பகைப்புலத்தையும், பேச்சு இயலையும் பிரதிபலிக்கும் அதேசமயம், மனித இயலை நுணுகி ஆராய வேண்டும்.

இலக்கியம், எல்லாக் கலைகளையும்போலவே, சர்வ தேசியமானது என்று சொல்லப்படுகிறது. அப்படியாயின், தேசிய இலக்கியக் கோஷத்தை, சர்வதேசியப்பாங்குடன் எப்படி இணைக்க முடியும்? நவீன அமெரிக்கக் கவிஞரான றொபேட் ∴ப்றொஸ்ட் என்பவர், கலையின் வேர் பிரதேச மண்வாக்கில் ஊன்றினாலும், அதன் மரமும் கிளைகளும் சர்வதேசியமனவை என்றார். (உண்மையில் ∴ப்றொஸ்ட்டே இதனை திருஷ்டாந்தமாகவும் விளக்குகிறார். எப்பொழுதும் இவரைப் போன்ற ஒரு பிராந்தியக் கவிஞன், இவ்வளவு சர்வதேசியக் கவிஞனாக இருந்ததில்லை.) இலக்கியம் தவிர்க்க முடியாமல், காலத்திலும் இடத்திலும், அது எதிரொலிக்கும் சமூகத்திலும், வேரூன்றியுள்ளது. ஆனால் இலக்கியம் மனிதத்துவத்தைத் தொடுவதினாலும், மனிதத்துவம் காலம் காலமாக எல்லா நாடுகளிலும் அடிப்படையில் ஒரேமாதிரியாக இருப்பதினாலும், காலம், இடம் ஆகிய எல்லைகளைக் கடந்து, சர்வதேசிய அந்தஸ்தினை அடைகிறது. இதற்குப் பூரண எடுத்துக் காட்டாக ஷேக்ஸ்

பியரே விளங்குகிறார். அவருடைய நாடகங்கள் எலிஸபெத்தின் இங்கிலாந்தில் வேரூன்றியிருக்கின்றன. அவருடைய நாடகங்களை, அவர் வாழ்ந்து அறுவடை செய்த சமூக அமைப்பின் புறமாக, மனோஉணர்வு கொள்ள இயலாது போனாலும், அவை மனிதருடைய இயல்புகளை, ஆழமாகவும் அகலமாகவும் திறமையுடனும் ஊடுருவி நோக்கி இன்றைக்கும் பொருந்தக்கூடியனவாக இசைப்பதினால், அவற்றினுடைய சர்வதேசியத் தன்மைக்குக் குந்தகம் விளைய வில்லை. நமக்குப் பழக்கமான ஓர் உதாரணத்திற்கு வருவோம். புதுமைப்பித்தனுடைய 'மகாமசானம்' என்ற சிறுகதை இதற்கு ஏற்றது. இரைச்சலும் வேகமும் மலிந்த சென்னை பட்டணந்தான் கதையின் பகைப்புலம். வீதியோரத்தில் நிறைந்து வழியும் கூட்டம். சாலையோரத்தில் ஒரு பிச்சைக்காரன் சாகக் கிடக்கிறான். அவனை எவரும் அனுதாபத்தோடு நோக்கவில்லை. இன்னொரு பிச்சைக்காரனும் ஒரு சிறுமியுந்தான், அவனைக் கவனிக்கும் ஜீவன்கள். கதை, அசலான இந்திய பூமியில் வேரூன்றி எழுந்தாலும், அது சர்வதேசியத்தைத் தொடும் ஒரு பிரகரணத்தை - மற்றொரு மானிடனின் துன்பத்தைப் பற்றி மனிதர் கொண்டிருக்கும் அசிரத்தையை உள்ளடக்கி, சகல நாடுகளுக்கும் பொருந்தும் தன்மையுடன் அமைந்துள்ளது. தனித்துவமும், அதே சமயம் பொதுநோக்கும், தேசிய வலிமையும், அதே சமயம் சர்வதேசியக் கண்ணோட்டமும் கொண்ட ஒரு கதைக்கு 'மகாமசானம்' ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். எவ்வளவுதான் முரண்பாடாக ஒலிப்பினும்கூட, அசலான தேசிய இலக்கியத்திற்கு ஒரு சர்வதேசியச் சுருதி இசைந்திருக்கும்.

- மரகதம், செப்டம்பர் 1961

○○○

ஏஜேயின் நூல்கள்

மத்து
அரசு வெளியீடு
கொழும்பு, 1970

மார்க்சியவாதிகளும் தேசியஇனப் பிரச்சினையும்
- மைக்கேல் லோவி
தமிழில்: ஏ.ஜே.கனகரட்னா
அலை வெளியீடு
யாழ்ப்பாணம், 1978

மார்க்சியமும் இலக்கியமும்: சில நோக்குகள்
அலை வெளியீடு
யாழ்ப்பாணம், 1981

மத்து (2ஆவது பதிப்பு)
மித்ர வெளியீடு
சென்னை, 2000

செங்காவலர் தலைவர் யேசுநாதர்
மித்ர வெளியீடு
சென்னை, 2000







R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8471 5636

இது ஒரு 'விம்பம்' வெளியீடு
தொடர்புகளுக்கு:
+44(0)20 8470 7883, +44(0)7956 490 694
+44(0)7984 136 160, +44(0)20 8472 8323, +44(0)20 8561 4230